**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.2186/ஆ5/2023, நாள். .06.2023**

•••••

பொருள் வேலூர் மாவட்டம் – தோல்பாவைக்கூத்து – நலிவடைந்த நாட்டுப்புறக்கலை – தோல்பாவைக்கூத்து நாடகம் மூலம் பள்ளி மாணவர்களுக்கு சுத்தம் பேணல், பிளாஸ்டிக் ஒழிப்பு போன்ற நாடகங்கள் நடத்த அனுமதி வழங்குதல் – தொடர்பாக

பார்வை வேலூர் மாவட்ட ஆட்சியரின் கடித ஓ.மு.எண். அ6/ 951247/2023, நாள். 25.05.2023

•••••

பார்வையில் காணும் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதத்திற்கிணங்க "தோல்பாவை கூத்து கலைமாமணி திரு பா. முத்துச்சந்திரன் அவர்கள் உடன் "அறமே மரம்" தொண்டு மற்றும் சமூக நலச் சேவை அறக்கட்டளை மூலம் வேலூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் பயிலும் பள்ளி மாணவர்களுக்கு ரூ.10/– கட்டணத்தில் தோல்பாவைக்கூத்து நிகழ்ச்சி மூலம் சுத்தம் பேணல், பிளாஸ்டிக் ஒழிப்பு, ஆரம்ப கல்வி, நல்லொழுக்கம் மற்றும் போதைக்கு எதிரான விழிப்புணர்வு முதலிய தலைப்புகளில் நாடம் நடத்த வேண்டி அனுமதி கோரியுள்ளார்.

எனவே, மேற்படி நலிவடைந்து வரும் தோல்பாவைக்கூத்து தொடர்பாக கலைஞர்கள் பள்ளிகளை அணுகினால் ரூ.10/–க்கு மிகாமல் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் பணிகள் பாதிக்காவண்ணம் தலைமையாசிரியரின் விருப்பத்திற்குட்பட்டு தகுந்த பாதுகாப்புடன் ஒத்துழைப்பு நல்கிட அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

**பெறுநர் –**
அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

**நகல் –**

1. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   வேலூர் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. நிறுவனர்,
   அறமே மரம் தொண்டு மற்றும்
   சமூக நலசேவை அறக்கட்டளை,
   சமத்துவபுரம், பொய்கை கிராமம்,
   சத்தியமங்கலம் அஞ்சல், அணைக்கட்டு வட்டம்,
   வேலூர் மாவட்டம்.